சுவிஸ் தமிழர் உதைப்பந்தாட்ட சம்மேளனம்
Schweiz Tamilisch`s Fußballverband
Association de football du Tamil Suisse
Federcalcio del Tamil Svizzera

25. März 2015

15.03.2015 அன்று நடைபெற்ற 2014-2015ம் ஆண்டிற்கான பொதுக்கூட்டத்தின் அறிக்கையும், சில முடிவுகளும்.

1. ஒரு கழகம் இரு அணிகளை அல்லது மேலதிக அணிகளை பதிவு செய்து குழுநிலை தெரிவின் பின் சுற்றுப்போட்டியில் பங்குபற்றாத பட்சத்தில். அவ் அணிக்கு வழங்கப்பட்ட புள்ளிகள் கழிப்பதோடு, அக்கழகம் பதிவு செய்த எல்லா அணிகளுக்குமான பணத்தை செலுத்துதல் வேண்டும்.

2. **சம்மேளனத்தினால் நடாத்தப்படுகின்ற இரு பொதுக்கூட்டத்திற்கும், கழகத்தின் சார்பாக யாராவது ஒருவர் வருகைதருதல் வேண்டும், அதைவிடுத்து தகுந்த காரணமின்றி வருகை தராவிடில், அக்கழகம் அடுத்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் வரை விளையாடுவதற்கு அனுமதி மறுக்கப்படும்.**

3. சம்மேளன இணையத்தளத்திலும் Appபிலும் நேரடி முடிவுகள் (live ticker) செய்தல் வேண்டும் (செய்வதற்கான கட்டுப்பணம் 25.- SFR)

4. Kilchbergல் உள்ள உள்ளரங்க மைதானத்தில் பார்வையாளர் பக்கத்தில் உள்ள சுவருடன் சேர்த்து விளையாடாமல் முன்னுள்ள சிவப்புக் கோட்டை வைத்தே விளையாட வேண்டும்.

5. ஒரு விளையாட்டு வீரர் அல்லது பொறுப்பாளர் காலமானால் சுற்றுப்போட்டியை தாம் நடத்துவதா அல்லது நிறுத்துவதா எனும் முடிவு சுற்றுப்போட்டியை நடாத்துபவர்களே எடுப்பார்கள். ஆனால் ஒருகழகம் அப்போட்டியில் பங்குபற்றாவிட்டால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது.

6. சுற்றுப்போட்டிக்கான திகதிகள் இரு வாரத்திற்கு ஒரு சுற்றுப்போட்டியேன மாற்றப்பட்டுள்ளது முதலில் முன்பதிவு (Reserve Later) செய்யும் கழத்திற்கு அனுமதி வழங்கப்படும்.

7. நேர அட்டவனையின் படி போட்டிகள் நடத்தப்படல் வேண்டும் (இரண்டு 2 நிமிடங்களுக்கு பின் மைதானத்தில் உள்ள கழகத்திற்கு 3:0 வெற்றி வழங்கப்படும்).

8. சுற்றுப்போட்டியின் போது பெயர்ப்பட்டியல் பூர்த்தி செய்து வழங்கியபின் புதிதாக வீரரை இணைக்க முடியாது. ஆனால் வீரரின் சீருடை இலக்கமும் பெயரும் முதலில் எழுதியிருந்தால் அவ்வீரர் கையொப்பமிட்டு விளையாடலாம்.

9. சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் விடையாட்டு வீரர்களை மதுபானச்சோதனை (Alkocol test) செய்வதாயின் சம்மேளனத்திற்கு 15.- SFR செலுத்தி இயந்திரத்தை பெறலாம்.

10. அனைத்து விளையாட்டு வீரர்களினதும் சீருடைகள் (jersey, Shorts , Socks) ஒரேமாதிரி இருத்தல் வேண்டும்.

11. சுற்றுப்போட்டிக்கான குழுநிலைத்தெரிவு குறைந்தது, வேரு ஒருகழக உறுப்பினர் இருத்தல் வேண்டும். இல்லாதபட்சத்தில் சம்மேளன உறுப்பினர் முரளியுடன் Skype மூலம் அல்லது Viber மூலம் தொடர்பு கொண்டு செய்தல் வேண்டும்

12. சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் சுற்றுப்போட்டி அறிக்கையை தமிழில் 5 நாட்களிற்குள் சம்மேளனத்தில் ஒப்படைத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் அடுத்த சுற்றுப்போட்டி நடாத்துவதற்கு அனுமதி மறுக்கப்படும்.

தொடர்புகளுக்கு

**STFA-Schweiz/** Schweizerische Tamilische Fussballverein/ 6037 Root /
Raiffeisenbank IBAN: CH46 8120 3000 0509 9347 5/ @: stfa@stfainfo.ch சிவகுமார்: 076/4288505

13. புதிய விதிமுரைகள்

11.1 உள்ளரங்க சுற்றுப்போட்டி

11.1.1 வெளியில் போன பந்தை அடிக்கும்போது, அல்லது பந்துகாப்பளர் outcorner பந்தை அடிக்கும்போது, அல்லது Free Kick பந்தை அடிக்கும்போது பந்தை கையிலெடுத்து

4secக்குள் அடிக்க வேண்டும், இல்லாத பட்சத்தில் பந்து எதிர் அணிக்கு வழங்கப்படும்.

11.1.2 முன்புறமாகவோ, பக்கமாகவோ அல்லது பின்புறமாகவோ மூன்று தரம் Tackling செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு கழகம் ஒரு விளையாட்டில் 4. தரம் இத்தடையை செய்தால், எதிர் அணிக்கு 10m தூரத்தில் வைத்து தண்டனையுதை வழங்கப்படும்.

அதை தொடர்ந்து வரும் இப்படியான ஒவ்வொறு foulக்கும் தண்டனையுதை வழங்கப்படும். இத்தப் foul விளையாட்டு நேரமுடிவில் இடம் பெற்று நேரம் முடிந்தாலும் தண்டனையுதை வழங்கப்படும்.

11.1.3 1/8 கொண்ட உள்ளரங்க சுற்றுப்போட்டிகளில் காலிறுதிக்கு தெரிவான கழகங்களுக்கு 3 புள்ளிகள் வழங்ப்படும்.

12 சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் முதலுதவிப் பெட்டி கண்டிப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

13 பெரியோர் சிறியோர் சுற்றுப்போட்டிகளை ஒன்றாகச் சேர்த்து நடாத்த விரும்பினால், பெரியோரின் சுற்றுப்போட்டி திகதியில் மாத்திரமே நடத்தலாம்.

இவ்வனைத்து விதிமுறைகளும் சம்மேளன யாப்பில் சேர்க்கப்பட்டு 15/16 seasonல் நடைமுறைக்கு வரும்.

சு. சிவகுமார்

பொறுப்பாளர்

சுவிஸ் தமிழர் உதைப்பந்தாட்ட சம்மேளனம்